செய்தி வெளியீடு எண்: 496 நாள்: 08.03.2024

# உலக மகளிர் நாளையொட்டி வாழ்த்து தெரிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு

நூற்றாண்டு நூற்றாண்டுகளாகத் தமக்கு விதிக்கப்பட்ட மடமைத் தளைகளை அறுத்தெறிந்து வெளியேறி, புத்துலகின் சிற்பிகளாக மிளிர்ந்திட உலக மகளிர் நாளில் அனைத்துப் பெண்களுக்கும் வாழ்த்துகள்!

உங்களின் சமூக – பொருளாதார ஏற்றத்துக்கும், அரசியல் பங்கேற்புக்கும் அடித்தளம் அமைத்து ஊக்குவிக்கவும், எல்லா நிலைகளிலும் உங்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும்தான் நமது திராவிட மாடல் (Dravidian Model) அரசு எண்ணற்ற பெண்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

சொற்களால் அல்லாமல், பெண்களைச் சக மனிதர்களாக, சமவுரிமை கொண்டவர்களாக மதிப்பதன் வழியே அவர்களைப் போற்றும் தலைமுறை உருவாகிட உழைப்போம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in